

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2025) சென்னை கலைவாணர் அரங்கில் கைத்தறித் துறையின் சார்பில் நடைபெற்ற 11 வது தேசிய கைத்தறி நாள் விழாவில் சிறந்த வேலைப்பாடு கொண்ட இரகங்களை திறம்பட நெசவு செய்த நெசவாளர்களை சிறப்பிக்கும் வகையில், 60 விருதாளர்களுக்கு மொத்தம் 10.00 இலட்சம் ரூபாய்க்கான பரிசுத்தொகை காசோலைகள் மற்றும் திறன்மிகு நெசவாளர் விருதுக்கான பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் ம் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வே. அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா ராமு, உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் நெசவாளர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2025) சென்னை கலைவாணர் அரங்கில் கைத்தறித் துறையின் சார்பில் நடைபெற்ற 11 வது தேசிய கைத்தறி நாள் விழாவினையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சியில் காட்சி படுத்தப்பட்டிருந்த கைத்தறி இரகங்களை பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் ஆர். காந்தி, பி.கே. சேகர்பாபு, துணை மேயர் மு.மகேஷ்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வே. அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா ராமு, உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் நெசவாளர்கள் உடனிருந்தனர்.

### கைத்தறித் துறை தமிழ்நாட்டின் மிகப் பாரம்பரியமான துறை!

# நெசவுத் தொழிலையும், நெசவாளர்களின் வாழ்வையும் முன்னேற்ற ‘திராவிட மாடல்’ அரசு எப்போதும் துணை நிற்கும்!

## சென்னையில் நடைபெற்ற தேசிய கைத்தறித் திருவிழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, ஆக. 9-**

**சென்னை கலைவாணர் அரங்கத்தில், நெசவாளர்களைப் போற்றுகிற வகையில், நடைபெற்ற தேசிய கைத்தறி திருவிழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டார்.**

**விழாவில், தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் கைத்தறி நெசவாளர்களுக்கு விருதுகளும், நெசவாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு நலத்திட்ட உதவிகளையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

**அப்போது அவர் திராவிட மாடல் அரசு என்றும் நெசவாளர்களுக்குத் துணை நிற்கும் என்று வாழ்த்திப் பேசினார்.**

இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் சார்பாக நடைபெறுகிற 11-வது தேசிய கைத்தறி நாள் விழாவில் பங்கேற்று, உங்களையெல்லாம் ஒரே இடத்தில் சந்திப்பதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அமைச்சர் அண்ணன் காந்தி அவர்களுக்கும் மற்றும் துறையின் அனைத்து அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**துயர் துடைத்த இயக்கம்**

இருக்க இடம், உண்ண உணவு, உடுத்த உடை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அத்தியாவசிய தேவை என்பதை நீங்கள் அறிவீர்கள். அதில் உடுத்த உடை என்ற தேவையைப் பூர்த்தி செய்து வருகின்ற நெசவாளர்களுக்கும், திராவிட இயக்கத்துக்கும் இடையேயான உறவு நேற்றைக்கு இன்றைக்கு உருவானது இல்லை. குறிப்பாக, 70 ஆண்டுகளுக்கு முன்பே, நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காக, களத்தில் நின்ற வரலாறு நம் கழகத்திற்கு உண்டு. 1953-ஆம் ஆண்டில் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை பேரறிஞர் அண்ணா அவர்கள் தெருத்தெருவாகச் சென்று விற்பனை செய்தார்.

இங்கு சென்னையில் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு நாள் முழுவதும் விற்பனை செய்தார். அன்றைக்கு அண்ணா, கலைஞரின் தம்பிகள் எல்லாம் சேர்ந்து ஒரே நாளில் விற்பனை செய்த தொகை மொத்தம் ஒரு லட்சம் ரூபாய். அந்த காலத்தில் இது மிகப்பெரிய தொகை. அன்றைய ஒரு லட்ச ரூபாயை இன்றைய பணமதிப்பில் மதிப்பிட்டால், அதன் மதிப்பு இன்றைக்கு 5 கோடி ரூபாய்.

**நெசவாளர்களின் வாழ்க்கை**

இதில் சென்னையில் கலைஞர் அவர்கள் மட்டும் 20 ஆயிரம் ரூபாய்க்கு கைத்தறித் துணிகளை விற்பனை செய்தார். நெசவாளர்களின் வாழ்க்கை நிலை, அவர்களின் கவலைகளை முற்றிலும் உணர்ந்தவராக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இருந்தார்கள். அதனால் தான் கலைஞர் அவர்கள் ஆட்சிப்பொறுப்புக்கு வந்தபோதெல்லாம் நெசவாளர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை, ஒவ்வொரு முறையும் தந்தார்கள்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் சுமார் 2 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. 2.5 லட்சம் நெசவாளர்கள் அவற்றில் பணியாற்றுகிறீர்கள். கைத்தறிகளின் எண்ணிக்கை அடிப்படையில், இந்தியாவிலேயே அசாம் மற்றும் மேற்கு வங்கத்திற்குப் பிறகு இன்றைக்கு தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருக்கிறது. அதற்கு எனது வாழ்த்துகள்.





தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற கைத்தறித் துணிகளுக்கு, இன்று உலக அளவில், பெரிய வரவேற்பு இருக்கிறது. குறிப்பாக, நமது காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கோவை கோலா காட்டன் புடவைகள், பவானி ஜமுக்காளம், மதுரை சுங்குடிப் புடவைகள் உள்ளிட்ட 10 கைத்தறிப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு இன்று கிடைத்திருக்கிறது.

**1,146 கோடி ரூபாய்**

கைகளால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு எப்போதும் ஒரு தனி மார்க்கெட் உண்டு. குறிப்பாக, கடந்த ஆண்டு மட்டும் 1,146 கோடி ரூபாய் மதிப்பிலான கைத்தறிப் பொருட்கள், தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. கைத்தறி நெசவாளர்களுக்கு நவீன தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள், புதிய வடிவமைப்புகள் பற்றிய விழிப்புணர்வு போன்றவற்றை ஏற்படுத்தினால், அவர்களால் மென்மேலும் சாதிக்க முடியும். அப்படிப்பட்ட அளப்பரிய பணியைத் தான் நம் கைத்தறித் துறை அமைச்சர் அண்ணன் காந்தி அவர்கள் தொடர்ந்து செய்துகொண்டு இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, அரசின் இலவச வேட்டி, சேலைகள், பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடை மூலமாகவும் இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை, நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்து வருகிறார்.

குறிப்பாக, கடந்த 16 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடந்த ஆண்டு பொங்கலுக்காக 3 கோடியே 54 லட்சம் வேட்டி, சேலைகள் கொள்முதல் செய்யப்பட்டன. இதற்காக நிலுவைத் தொகையுடன் சேர்த்து, நெசவாளர்களுக்கு 150 கோடி ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, கைத்தறி நெசவாளர்களுக்கு 300 யூனிட் அளவு கட்டணமில்லா மின்சாரமும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிகொண்டு இருக்கிறார்கள். நம் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் கோ-ஆப் டெக்ஸ் மூலம் இன்றைக்கு லண்டன், ரஷ்யா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி போன்ற நாடுகளில் நடந்த சர்வதேச கண்காட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டு, நெசவாளர்களுக்கு உற்சாகமும், உத்வேகமும் தந்து கொண்டிருக்கிறது நம் கைத்தறித் துறை.

**துணை நிற்போம்!**

ஆரணியில் 44 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் கலைஞர் நூற்றாண்டு நினைவு கைத்தறிப் பட்டுப் பூங்கா அமைக்கப்பட உள்ளது. இதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் 10 இடங்களில் சிறு கைத்தறிப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதில் காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சிறு பூங்காக்கள் இன்றைக்கு செயல்பாட்டிற்கு வந்துவிட்டன. ஆகவே, நம் திராவிட மாடல் அரசு, நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கு என்றைக்கும் துணை நிற்கும்.

நீங்கள் சார்ந்து இருக்கின்ற கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெருமளவில் பங்காற்றியதற்காக சிறந்த நெசவாளர் விருதும், சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கியதற்காக சிறந்த வடிவமைப்பாளர் விருதும் இன்றைக்கு வழங்கப்படுகிறது. விருதுகளை பெறுகின்ற அனைவருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் கைத்தட்டல்களின் மூலம் தெரிவித்துக் கொள்வோம்.

தமிழ்நாட்டின் கைத்தறித் துறை என்பது மிக மிக பாரம்பரியமான ஒரு துறை. இதை மென்மேலும் வளர்த்தெடுத்து, நெசவுத் தொழிலையும், நெசவாளர்களின் வாழ்வையும் முன்னேற்றுவது நம் பொறுப்பு. அந்தப் பணியை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்வோம் என்று சொல்லி, இந்த வாய்ப்பை அளித்த அமைச்சர் அண்ணன் காந்தி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் ஆர்.காந்தி, பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகர துணை மேயர் மகேஷ்குமார், கைத்தறித் துறை அரசு செயலாளர் அமுதவள்ளி ஐ.ஏ.எஸ்., கைத்தறித் துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார் ஐ.ஏ.எஸ்., கோ-ஆப் டெக்ஸ நிர்வாக இயக்குநர் கவிதா ராமு ஐ.ஏ.எஸ்., தமிழ்க்கேள்வி செந்தில் வேல் மற்றும் அரசு அதிகாரிகள், விருது பெற வந்தவர்கள், நெசவாளர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2025) சென்னை கலைவாணர் அரங்கில் கைத்தறித் துறையின் சார்பில் நடைபெற்ற 11 வது தேசிய கைத்தறி நாள் விழாவில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட மின் வணிக தளத்தை (Revamped Co–optex e–commerce Website) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி வே. அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திருமதி கவிதா ராமு, உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் நெசவாளர்கள் உடனிருந்தனர்.